முதன்மை சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்.

2026–ம் ஆண்டு **பிப்ரவரி** மாதம் 04–ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன்,பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**அ.வ.எண்.275/2024**

**வா.சா:–1 (சத்தியாபிரியா)**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (பிரதிவாதி தரப்பில்):–**

நான் ஈரோடு குடும்ப நல நீதிமன்றத்தில் தாக்கல் செய்த எப்சிஓபி.எண்.342/2024 மனுவில் எனது கணவர் தாக்கல் செய்த எதிருரையின் நகல் தான் என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணம் **பி.வா.த.சாஆ.1** ஆகும். இதற்கு முன்பாக என்னை குறுக்கு விசாரணை செய்தபோது எனது மாமனார், மாமியார் மற்றும் கணவர் ஆகியோர்கள் தாவா சொத்து வீட்டில் தான் வசித்து வந்தார்கள் என்பதற்கு தாவா சொத்து வீட்டு முகவரிக்கு ஆதார் அட்டை வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது கணவர் தாவா சொத்து முகவரியில் வசிக்கவில்லை. மேற்படி எனது கணவர் மற்றும் மாமனார், மாமியார் ஆகியோர்களின் ஆதார் அட்டை என்னிடம் காட்டப்படுவது தான், அது **பி.வா.த.சா.ஆ.2** ஆகும். ஏற்கனவே என்னை குறுக்கு விசாரணை செய்தபோது என்னுடைய வருமான வரி கணக்கு விவரங்களை தாக்கல் செய்வதாக கூறியிருந்தேன் என்றும், என்னுடைய வருமானவரி கணக்கு விவரங்கள் தற்போது தாக்கல் செய்ய முடியுமா என்றால் வருமான வரி கணக்கு விவரங்களை தாக்கல் செய்வதற்காக என்னுடைய ஆடிட்டரை அணுகியபோது தற்போதுள்ள ஆடிட்டரால் முன்னதாக வருமான வரி கணக்கு வேறு ஆடிட்டர் மூலமாக தாக்கல் செய்திருந்ததால் அவற்றை தற்போது எடுக்க முடியாது என்று சொல்லிவிட்டதால் தாக்கல் செய்ய முடியவில்லை. பிரதிவாதியிடம் ரூ.1000/– சம்பளத்திற்கு வேலை பார்த்து வந்தபோது பிரதிவாதியுடன் காதல் ஏற்பட்டு, பிரதிவாதி என்னை திருமணம் செய்துகொண்டார் என்றும், பிரதிவாதிக்கு என்மீது இருந்த அன்பின் காரணமாகத்தான் தாவா சொத்தை என்னுடைய பெயரில் கிரயம் வாங்கிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் பெற்று வந்த சம்பளத்தில் பாதியை எனது மாமியாரிடம் 2017–ம் வருடம் வரை கொடுத்துவந்ததாக சொல்லியுள்ளேன் என்றும், மாமியாரிடம் கொடுத்த பாதி சம்பளம் போக மீதி சம்பளத்தை வைத்துக்கொண்டு தாவா சொத்தை கிரயம் பெற்றிருக்க

முடியாது என்றால் சரியல்ல. நான் மாதம் ரூ.7000/– சம்பளம் வாங்கிவந்தேன். மாமியாரிடம் மாத மாதம் ரூ.2000/– மட்டும் தான் கொடுத்துவந்தேன். மாமியாரிடம் கொடுத்தது போக மீதமுள்ள தொகையை சேமித்தும், அது தவிர சீட்டு நடத்தியும், இன்சூரன்ஸ் நிறுவனம் நடத்தி தொழில் செய்துவந்து அதன் மூலம் கிடைத்த தொகையை கொண்டு தான் தாவா சொத்தை என் பெயருக்கு கிரயம் வாங்கினேன். இன்சூரன்ஸ் நிறுவனத்தின் பெயர் என்னவென்றால் விகேர் அசோசியேட்ஸ் ஆகும். மேற்படி காப்பீடு நிறுவனம் நடத்திவந்ததற்கான ஆவணங்களை தாக்கல் செய்யமுடியுமா என்றால் மேற்படி ஆவணங்கள் எல்லாம் பழைய ஆவணங்களாகும். வீட்டில் தேடிப்பார்த்து இருந்தால் தாக்கல் செய்ய முடியும். மேற்படி நிறுவனத்தை தனியாக தான் நடத்திவந்தேன். மேற்படி காப்பீடு நிறுவனம் எது சம்மந்தமான காப்பீடு நிறுவனம் என்றால் அனைத்து வகையான காப்பீடுகளும் சேர்ந்த நிறுவனமாகும். 2011–ம் வருடம் இறுதியில் விஜய் விகாஸ் பள்ளியிலும், 2015–ம் வருடம் டிசம்பர் மாதத்தில் கோபியிலுள்ள எம்.ஆர்.எஸ். பள்ளியில் பங்குதாரராக சேர்ந்தேன். மேற்படி 2 பள்ளிகளிலும் பங்குதாரராக சேர்வதற்கு எவ்வளவு தொகை செலுத்தப்பட்டது என்றால் ஆரம்பத்தில் விஜய் விகாஸ் பள்ளியில் ரூ.65 லட்சமும், எம்.ஆர்.எஸ் பள்ளியில் ரூ.25 முதல் 30 லட்சம் வரை செலுத்தினேன். அந்த காலகட்டத்தில் மேற்படி தொகை செலுத்துமளவிற்கு எனக்கு வசதி, வாய்ப்பு இல்லையென்றால் சரியல்ல. மேற்படி தொகையை ஒரே தவணையில் செலுத்தவில்லை. கொஞ்சம், கொஞ்சமாக செலுத்தினேன். மேற்படி தொகையை எங்கிருந்து செலுத்தினேன் என்றால் சீட்டு நடத்தியும், ஏஜென்ஸி நடத்தி கிடைத்த கமிஷனைக்கொண்டும் மேற்படி தொகையை செலுத்தினேன். மேற்படி சீட்டு நடத்துவதன் மூலமும், ஏஜென்ஸி கமிஷன் மூலமும் மாதம் எனக்கு எவ்வளவு வருமான் வரும் என்றால் மாதம் ரூ.50 ஆயிரம் முதல் 1 லட்சம் வரை வருமானம் கிடைக்கும். எனக்கு வாடகை தாய் மூலமாக தான் குழந்தை பிறந்தது என்றால் சரிதான். அதற்கு எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டது என்றால் ரூ.10 முதல் 15 லட்சம் செலவு செய்யப்பட்டது. தாவா சொத்தில் அருகில் உள்ளவர்களை விசாரணை செய்தால் தாவா சொத்தில் யார் குடியிருந்துவருகிறார்கள் என்ற உண்மை தெரியவரும் என்றால் என்னை வீட்டை விட்டு வெளியே துரத்திவிட்டு வீட்டில் இருந்து வருகிறார்கள். நான் பல நபர்களின் தவறான அறிவுரையை கேட்டு தான் எதிர்மனுதாரர் மீது விவாகரத்து மனு தாக்கல் செய்தும்,

எதிர்மனுதாரரை மிரட்டி பணிய வைக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்த பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி பல வருடங்களாக ஈரோட்டில் குடியிருந்துவருகிறார் என்றும், பிரதிவாதியின் பெற்றோர்கள் தான் தாவா சொத்தில் குடியிருந்துவருவதால் அவர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல. தாவா சொத்தின் கிரய ஆவணமானது என்னுடைய பெயருக்கு பெயரளவில் தான் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து கிரயம் பெற்றதற்கான கிரய தொகையை பிரதிவாதி தான் செலுத்தினார் என்றால் சரியல்ல. தாவா சொத்திலுள்ள வீட்டில் நான் ஒருபோதும் சுவாதீனத்தில் இருக்கவில்லையென்றால் என்னை தாவா சொத்திலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றிவிட்டார்கள். தாவாவிற்கு வழக்கு மூலமே எதுவும் இல்லையென்றும், சொல்லியுள்ள வழக்கு மூலம் தவறு என்றால் சரியல்ல. என்னுடைய பெற்றோர் எனக்கு சொத்துக்கள் எதுவும் கொடுக்கவில்லையென்றும், எனது பெற்றோருக்கும் போதிய வருமானம் இல்லையென்றும், தாவா சொத்தானது பிரதிவாதி கொடுத்த தொகையை கொண்டு தான் என்னுடைய பெயரில் கிரயம் பெறப்பட்டது என்பதால் தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Sd/-M.Ramachandran

| |
|---|
| Taken down before / by me in the open court and read over / interpreted to the witness and acknolwedged by him / her to be correct. |
| Sd/.M.Ramachandran,<br>Principal Subordinate Judge, Tiruchengode. |